# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1817/40 - 2013 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2013.07.05

*1817/40 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சிவில் விமான சேவைகள் அமைச்சு**

*சிவில் விமான சேவைகள் அதிகார சபை*

**196 விமான போக்குவரத்து ஒழுங்குகள் கோவையின் கீழ், சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுவிக்கப்படும் அறிவித்தல்**

உள்ளக விமான போக்குவரத்து செயற்பாடுகள் (Domestic, Private Air Service) வாடகை செயற்பாட்டு விமானப் போக்குவரத்து சேவைகள் (Charter Air Service) மற்றும் வானில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் (Aerial work) நாட்டில் முன்னெடுப்பதற்காக சிவில் விமான சேவைகள் சட்டம் மற்றும் அதற்குரிய சேவைகள் உட்பட நிபந்தனைகளுக்கு உரியதாக விமான செயற்பாட்டு சான்றிதழ் வாடகை செயற்பாட்டு விமானப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மற்றும் வானில் இடம்பெறும் பணிகளுக்கான அனுமதிப்பத்திரத்தினையும் பெற்றுக்கொள்வதற்காக ஹோமாகம, வலவ்வ வீதி, இலக்கம் 409 கொண்ட இடத்தில் அமைந்துள்ள சிவில் விமான (தனியார்) கம்பனியினால் 2013, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி கொண்ட விண்ணப்பப்படிவம் 2013, பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது. விண்ணப்பப்படிவத்திற்கமைய வரையறுக்கப்பட்ட சிவில் விமான (தனியார்) கம்பனியின் பணிப்பாளர் சபை கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

திரு. வீரன்த ஹரிஸ்சந்திர இந்திரா ஹெட்டி ஆரச்சி
திருமதி சுனன்த தமயந்தி ஹெட்டி ஆரச்சி
திரு. வின்துல ஹெட்டி ஆரச்சி

இக்கம்பனியின் உத்தேச விமான செயற்பாட்டு பணிகள் தொடர்பான முழுமையான பொறுப்புமிக்க முறைமைத்துவத்துக்காக ஓய்வுபெற்ற லெப்டினன்ட் கேர்னல் திரு. பீ. பீ. எஸ். கே. பதிரண அவர்களை வரையறுக்கப்பட்ட ரிவிஸ்க்லைன் (தனியார்) கம்பனியினால் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்களினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி கொழும்பு 02, ஹுனுப்பிடிய வீதி, இலக்கம் 04 கொண்ட இடத்தில் அமைந்துள்ள சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கீழ் மாடியில் அமைந்துள்ள தொழில்நுட்ப நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் பொதுமக்களுக்கு பார்வையிட முடியும்.

உத்தேச செயற்பாடுகளுக்காக தேவையான விமான செயற்பாட்டுச் சான்றிதழ் (Air operator certificate) வாடகை செயற்பாட்டு விமானப் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் (Charter license) உட்பட ஏனைய உரிய அங்கீகாரங்களை வழங்குவதற்கு முன்னர் சிவில் விமான சேவை சட்டம் விமானப் போக்குவரத்துக் கோவையைப் போன்று உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள் (International Standard and Recommended Practices) மற்றும் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அதனுடன் இணைந்த உள்நாட்டுத் தேவைகளுக்கு அமைய நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு மிகுந்த விமான போக்குவரத்து சேவை, செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகளை கூட்டிணைத்து செயற்பாடுகளுக்கு அமைய உரியவாறு பரிசோதனை செய்து இவ்விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தும்


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

வேலைத்திட்டம் 2013, யூலை 29 ஆந் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு 10 நாட்களுக்கு முன்னர் எந்தவொரு நபருக்கும் மேல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் எழுத்து மூலம் உரிய காரணத்தை அடிப்படையாயகக் கொண்ட விடயம் விமானப் போக்குவரத்துக்குரிய கோவைகளுக்கு அமைய எனக்கு அறிக்கைப்படுத்த முடியும். உள்ளடக்கப்பட்டுள்ள சகல வெளியீடுகளினதும் உட்கட்டமைப்பினை எழுத்து மூல சாட்சியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான விஞ்ஞாபனங்களை எனக்கு சமர்ப்பிக்கப்படும் வேளையில் அவரினால் அதன் பிரதியை விண்ணப்பதாரர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டியதுடன் அவ்வாறு அனுப்பப்பட்டதற்கான சான்றிதழ் உரிய விஞ்ஞாபனத்துடன் இணைந்திருக்க வேண்டும்.

எம். எம். சி. நிமல்சிரி,
சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும்
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை,
இலக்கம் 04, ஹுனுப்பிட்டிய வீதி,
கொழும்பு 2,
2013, யூலை 5.

07-542

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது